**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.125/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.2** |
| **Name** | **:** | திருமதி குமாரி |
| **Father's Name** | **:** | செல்வராஜ் |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

1,2,4 முதல் 8 எதிரிகள் ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.06.2023.**

முதல் விசாரணை -

நான் கொண்டையாங்குப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய கணவர். இறந்த கண்ணன் என்னுடைய தந்தை. ஆஜர் எதிரிகளை தெரியும். என் அப்பா இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் செங்கல்பட்டுக்கு வந்து விசாரித்தார்கள்.

சம்பவம் எப்போது நடந்தது என்றால் சுமார் 12 வருடத்திற்கு முன்பு மாலை 5 மணிக்கு எங்கள் கழனியிடம் நடந்தது. என் அம்மா லட்சுமிதேவி, நான் வேறு நிலத்தில் களை எடுத்துக்கொண்டு இருந்தோம்.

எதிரிகள் எல்லாம் ஒளிந்து இருந்து என் தந்தையை தாக்கியது பற்றி எங்களுக்கு தெரியாது. என் அப்பா அழுத சத்தம் கேட்டு ஓடி வந்து பார்த்தபோது தான் எதிரி கிருஷ்ணன் கத்தியால் என் அப்பாவின் மண்டையில் வலது இடது இரண்டு பக்கத்திலும் தாக்கினார்.

மாரிமுத்து கிருஷ்ணனிடம் இருந்து கத்தியை பிடுங்கி என் கணவரின் இடது கை விரலில் தாக்கி இடது மண்டையில் கத்தியால் வெட்டிவிட்டார். நான் என் கணவரின் கையில் வந்த ரத்தத்தை என்னுடைய புடவையால் அழுத்தி பிடித்துக்கொண்டிருக்கும்போது பெண் எதிரிகள் எல்லாம் சேர்ந்து என்னையும் என் அம்மாவையும் கொம்பாலும் கையாலும் தாக்கினார்கள். அடிவாங்கியதாலும், என் அப்பாவை பார்த்ததாலும் நாங்கள் இருவரும் மயங்கி விழுந்து விட்டோம்.

பிறகு என்னை மருத்துவமனையில் சேர்த்தது எல்லாம் தெரியாது. கண் விழித்து பார்த்தபோது செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் இருந்தோம். மூன்றாம் நாள் போலிசார் வந்து என்னை விசாரணை செய்தார்கள். என் வீட்டுக்காரரை விசாரித்து அதற்கு ரசீது கொடுத்தார்கள். வேறு எதுவும் எனக்கு தெரியாது. என் அப்பா இறந்த பிறகு என்னை அழைத்து வந்தது தான் தெரியும். என் அப்பா சென்னை அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டதை பற்றி சொன்னார்கள். நாங்கள் சிகிச்சையில் இருந்ததால் நாங்கள் போய் பார்க்கவில்லை. நில தகராறு தான் எங்களுக்குள் பிரச்சனை.

<u>1,2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நாங்கள் களை எடுத்த நிலம் யாருடையது என்றால் அதுவும் எங்களுடைய நிலம் தான். என் அப்பாவின் அடிப்பட்ட சத்தம் கேட்டு போய்

தான் பார்த்தோம் என்றால் நாங்கள் போகும்போது என் அப்பாவை கிருஷ்ணன் வெட்டிக்கொண்டு இருந்தார். மாரிமுத்து என் அப்பாவை கம்பியாலோ, கொம்பாலோ அடித்தார். இருட்டில் அடித்ததால் தெரியவில்லை. ஆனால் கையால் அடிக்கவில்லை. அவர்கள் எல்லாம் கொம்பு, தடி வைத்திருந்தார்கள்.

போலிசார் என்னை என்றைய தினம் விசாரித்தார்கள் என்றால் மூன்றாம் நாள் விசாரித்தார்கள். அன்றைய தினம் என் கணவர் தான் சொன்னார். என்னால் பேச முடியவில்லை. மயக்கம் தெளிந்துவிட்டது. எதிரிகள் மாரிமுத்து, தனலட்சுமி, கன்னியம்மாள் மற்றும் ராதா ஆகியோர்களுக்கு என் தந்தையை பார்க்க சென்றபோது காயம்பட்டு இருந்ததா என்றால் அவர்களுக்கு எல்லாம் காயம்படவில்லை. எங்களை அடிப்பதற்காக மாரிமுத்து, கன்னியம்மாள், தனலட்சுமி, ராதா, சீதா ஆகியோர் மறைந்திருந்து ஓடிவந்தார்கள்.

எங்களுக்கு காயம்பட்டதாக சொல்லப்படும் அன்றே மாரிமுத்து, கன்னியம்மாள், தனலட்சுமி, ராதா ஆகியோர்களுக்கு காயம்பட்டு 108ஆம்புலன்ஸ் மூலம் வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள் என்றால் அதை பற்றியெல்லாம் எனக்கு தெரியாது. நான் மயங்கி விழுந்துவிட்டேன்.

நான், என் கணவர் செல்வராஜ், என் அம்மா லட்சுமிதேவி, என் அப்பா கண்ணன் ஆகியோர் எதிரிகள் அவர்கள் நிலத்தில் விதைத்த உளுந்தை மேல் ஓட்ட சென்றோம் என்றால் நாங்கள் போகவில்லை. நான் மருத்துவரிடம் யாரால் எந்த ஆயுதத்தால் எங்கு ஏற்பட்டது என்று வந்தவாசியிலும்

செங்கல்பட்டிலும் சொல்லவில்லை என்றால் நான் எங்கும் எதுவும் சொல்லவில்லை. செங்கல்பட்டில் என் கணவர் சொன்னார். என் கணவர் பெண் எதிரிகள் கொம்பாலும் தடியாலும் அடித்தது குறித்து சொன்னாரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

நாங்கள் தான் எதிரிகள் நிலத்தில் ஏர் ஓட்ட சென்று ஆட்களை அழைத்துச் சென்று எதிரிகளை தாக்கினோம் என்றால் எதிரிகள் தான் எங்களை தாக்கினார்கள். சண்டை ஆட்கள் தவிர வெளியாட்கள் யாரும் இல்லை. எதிரி கிருஷ்ணன் வெட்டியதாக சொல்வது எல்லாம் பொய் என்றால் நான் நேரடியாக பார்த்தேன்.

8ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.